DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.10/2025**

Prosecution **PW.3**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | வளர்மதி | கிராமம் : | |
| கணவர் பெயர் : | நீலமேகம் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.06.2025

1 முதல் 5 எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் கிருஷ்ணராயபுரம் நத்தமேட்டில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது கொழுந்தனார் மனைவி அ.சா. 2 நீலமேகம் எனது கணவர். ஆஜர் எதிரியை தெரியும் அவர்கள் எனக்கு உறவினர்கள். எங்களுக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் இடையே சொத்து சம்பந்தமான பிரச்சனை இருந்து வருகிறது. தோட்டத்து வீட்டில் பசுமை வீடு கட்டி நாங்கள் குடியிருந்து வருகிறோம். தோட்டடத்துக்கு சென்றால் மாடு, கன்றுகளை பராமரித்து சமைத்து சாப்பிட்டு இரவு ஊரில் உள்ள வீட்டிற்கு வந்துவிடுவது வழக்கம்.

2. 26.12.2020ம் தேதி காலை 06.30 மணியளவில் நான் . அ.சா.1, அ.சா.2 கோரை அறுப்பதற்காக ஞானசேகரன் என்பவரை அழைத்து கொண்டு தோட்டத்து வீட்டிற்கு சென்றோம். தோட்டத்து வீட்டில் பூட்டு அறுக்கப்பட்டு வீட்டில் ஆஜர் எதிரிகள் வீட்டில் உட்கார்ந்திருந்தார்கள். நானும் மல்லிகாவும் ஆஜர் எதிரிகளிடம் வீட்டின் பூட்டை அறுத்து உட்கார்ந்து அராஜகம் செய்கிறீர்கள் என்று கேட்டோம். அதற்கு 1ம் எதிரி ஜெதிசன் தேவடியா புண்டட மவளே என்று அசிங்கமாக திட்டி நான் கேஸ் போட்டதற்கு கேஸ் முடியும் வரை வீட்டை விட்டு வெளியே போகமுடியாது என்று திட்டினார்.

3. மேனகா நீங்களெல்லாம் ஒரு ஆளு புண்டையா என்று அசிங்கமாக திட்டி இது என்னுடைய சொத்து வெளியே போங்கடி என்று திட்டினார். செல்வராஜ்

நீங்க யாருடி எங்க சொத்துக்கு கேட்கறது வெளியே தேவடியா மவளே என்று திட்டினார். ராஜேஸ்வரி விளக்குமாறை எடுத்து பிச்சுவிடுவேன் வெளியே போ என்றும் திட்டினார். பிரவீன் உள்ளேவந்தால் எங்களை வெட்டிவிடுவேன் என்று ஓடிப்போய்விடுங்கள் என்று மிரட்டினார். ஜெகதிஸ் வீட்டிலிருந்து அரிவாளை எடுத்து வந்து வீட்டிற்குள் வந்தால் வெட்டிவிடுவேன் என்று துரத்தினார்கள். பின்னர் சம்பவம் குறித்து 28ம் தேதி காவல் நிலையம் சென்று அ.சா.1 புகார் கொடுத்தார். பசுமை வீட்டிற்கான பட்டா என்னிடம் உள்ளது. பசுமை வீடு ஒதுக்கப்பட்டதற்கான உத்தரவாணை நகல் என்னிடம் காட்டப்படுவதுதான் . பசுமை வீடு ஒதுக்கப்பட்டதற்கான உத்தரவாணை நகல் எதிரிகள் தரப்பில் நகல் என்பதால் ஆட்சேபணை செய்யப்பட்டது ஆட்சேபணைக்கு உட்பட்டு அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போதிய வாய்ப்பளித்தும் வழக்கறிஞர் குறுக்குவிசாரணை செய்யவில்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்/—திரு.ஆர்.பாக்கியராஜ்**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.